ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1985/20 - 2016 සැප්තැම්බර් මස 21 වැනි බදාදා - 2016.09.21

*1985/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

***1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்***

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, களியாட்ட வரிகள் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள களியாட்ட அலுவல்களுக்காக அறவிடப்படுகின்ற பிரவேசக் கட்டணத்தில் 25 % களியாட்ட வரியொன்றை விதித்து அறவிடுவதற்கும் அவ்வாறாயினும் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் சினிமா மண்டபங்களில் காட்சிப்படுத்தப்படுகின்ற திரைப்படக் கண்காட்சிகளுக்காக அக்களியாட்ட வரிப்பணம் பிரவேசக் கட்டணத்தில் 10 % களியாட்ட வரியொன்றாக விதித்து அறவிடுவதற்கும் 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பஹா மாநகர சபையால் 2016.02.12 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்வலு மற்றும் எரிசக்தி, சுற்றாடல் நடவடிக்கை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கின்றேன்.

இசுர தேவப்பிரிய,
மேல் மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் நிதி மற்றும்
திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு,
உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார
ஊக்குவிப்பு, மின்வலு மற்றும் எரிசக்தி சுற்றாடல் நடவடிக்கை,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை
தொடர்பான அமைச்சர்.

சிராவஸ்தி மந்திரய,
ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2016, செத்தெம்பர் 07

10- 80